# குகை மேல்நிலைப் பள்ளி

## சேலம் – 636 006

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# கணக்குப்பதிவியல்

### கருத்தியல் வினாக்கள்

### பாடம் 1 – 10

**Prepared by**

**G.PRAKASH. M.com. M.phil. B.ed. D.ted**

**GUGAI HR.SEC. SCHOOL. SALEM -6**

**CONTACT - 9488270034**

Padasalai

# அலகு – 1

# முழுமை பெறாத பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

## I மிகக்குறுகிய வினா விடை –

### 1. முழுமை பெறாத பதிவேடுகள் என்றால் என்ன?

கணக்கேடுகள் இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்காத போது அவை முழுமை பெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகிறது.

ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டுமே முழுமையாகவும் பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகிறது.

### 2. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரிக்கப்படும் கணக்குகளைத் தருக.

- ✓ ரொக்க கணக்கு
- ✓ ஆள்சார் கணக்கு – கடனீந்தோர் க/கு
  – வாடிக்கையாளர் க/கு ஆகியவை ஒற்றைப்பதிவு முறையில் பராமரிக்கப்படுகின்றன.

### 3. நிலைஅறிக்கை என்றால் என்ன?

- ✓ நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பை காட்டும் ஓர் அறிக்கையாகும்.
- ✓ இது இருப்புநிலைக்குறிப்பை போன்று இருக்கும்.

## II குறுகிய வினா விடை

### 1. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?

- ✓ இதில் ரொக்க கணக்கு மட்டும் ஆள்சார் கணக்குகள் மட்டுமே பதியப்படுகின்றன.
- ✓ இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்.
- ✓ சிறிய அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மைக் கணக்குகள் இம்முறையில் பராமரிக்கப்படும்.

## 2. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

- ✓ இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்
- ✓ இருப்பாய்வை தயாரிப்பது கடினம்.
- ✓ அரசு வரி அதிகாரிகள் மற்றும் பிற சட்ட அதிகாரிகள் முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்படும் கணக்குகளை ஏற்றுக் கொள்வதில்லை.

## 3. இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறாத பதிவேடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு யாவை?

| வேறுபாட்டின் அடிப்படை | இரட்டைப்பதிவு முறை | முழுமை பெறாத பதிவேடுகள் |
|---|---|---|
| **பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்** | ஆள்சார் சொத்து மற்றும பெயரளவு கணக்குகள் முழுமையாக பராமரிக்கப்படுகின்றன. | பொதுவாக ஆள்சார் மற்றும் ரொக்க கணக்கு மட்டும் முழுமையாக பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவு கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை |
| **இருப்பாய்வு தயாரித்தல்** | கணக்கீட்டு சரிதன்மையை சோதித்து பார்க்க இருப்பாய்வு தயாரிக்க முடியும். | கணக்கீட்டுத் தன்மையினை சோதித்து பார்க்க இருப்பாய்வு தயாரிக்க முடியாது. |
| **பொருந்தும் தன்மை** | இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும். | இது சிறிய அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருந்தலாம். |

## 4. நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டப் படிநிலைகளைத் தருக?

- ✓ தொடக்க நிலை அறிக்கை தயாரித்து தொடக்க முதலை கண்டறியவும்
- ✓ இறுதி நிலை அறிக்கை தயாரித்து இறுதி முதலை கண்டறியவும்
- ✓ இறுதி முதலுடன் எடுப்பு தொகையினைக் கூட்டவும்
- ✓ சரிகட்டப்பட்ட இறுதி முதலை கண்டறிய கூடுதல் முதலைக் கழிக்கவும்.
- ✓ சரிகட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதலை கழித்து இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.
- ✓ **இலாபம் = இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் – தொடக்க முதல்**

### 5. நிலையறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பு இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும் –

| வேறுபாட்டிற்கான அடிப்படை | நிலையறிக்கை | இருப்புநிலைக்குறிப்பு |
|---|---|---|
| நோக்கம் | நிலையறிக்கை பொதுவாக வியபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. | இருப்புநிலைக்குறிப்பு வியாபாரத்தின் நிதிநிலையை கண்டறிய தயாரிக்கப்படுகிறது. |
| தயாரிப்பின் அடிப்படை | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாக கொண்டதல்ல. | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது. |
| நம்பகத்தன்மை | இது முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத்தன்மை உடையதல்ல. | இது இரட்டைப் பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால் நம்பகத்தன்மை உடையது. |

# அலகு – 2

# இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

## I மிகக் குறுகிய வினா விடை –

### 1. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.

- ✓ சில அமைப்புகள் இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காகவும் தொடங்கப்படுகின்றன.
- ✓ அவை கலைப் பண்பாடு கல்வி மற்றும் விளையாட்டு போன்றவை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றன.
- ✓ இந்த அமைப்புகள் இலாப நோக்கற்ற அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

## 2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?

- ✓ பெறுதல் செலுத்துல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.
- ✓ இது ஒரு சொத்துத் தன்மையைக் கொண்டதாகும்.

## 3. உயில்கொடை என்றால் என்ன?

ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்

## 4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.

உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

## 5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

ஆயுள் உறுப்பினர் கட்டணம் உயில்கொடை குறிப்பிட்ட நன்கொடை

சிறப்பு நிதி பரிசு நிதி

## 6. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

சந்தா முதலீடு மீதான வட்டி

பழைய செய்திதாள் விற்றது நிலைவைப்பு மீதான வட்டி

பழைய விளையாட்டு பொருள் விற்றது

## III. குறுகிய வினாக்கள்

## 1. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

- ✓ வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது இலாப நோக்கமற்ற அமைப்புகளில் கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும்.
- ✓ ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. இது ஒரு பெயரளவு கணக்காகும்.
- ✓ இதில் நடப்பு ஆண்டுக்குரிய வருவாயின வரவுகள் மற்றும் வருவாயினச் செலவுகள் மட்டும் பதிவு செய்யப்படுகின்றன.

## 2. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?

(அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள்:–

(i) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டுக்குரிய பெற வேண்டிய சந்தா நடப்பாண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். .

(iv) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில் நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில் எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

(ஆ) இருப்புநிலைக்குறிப்பில் செயல்முறைகள்:–

(i) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெற வேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக்குறிப்பில் சொத்து பக்கத்தில் காண்பிக்கப்படும்.

(ii) நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா அவ்வாண்டின் இருப்புநிலைக்குறிப்பில் பொறுப்பு பக்கத்தில் காண்பிக்கப்படும்.

## 3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| 1.நோக்கம் | இது ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது | இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் (பற்றாக்குறை) குறித்து அறிந்து கொள்ள தயாரிக்கப்படுகிறது |
| 2.கணக்கின் தன்மை | இது ஒரு சொத்துக் கணக்காகும். இது ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்க பெறுதல்கள் பற்றுப்பக்கத்திலும் ரொக்க செலுத்தல்கள் வரவுப்பக்கத்திலும் பதியப்படுகின்றன | இது ஒரு பெயரளவு கணக்காகும். இது இலாப நட்ட கணக்கை போன்றது. செலவுகள் பற்றுப் பக்கத்திலும் மற்றும் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. |
| 3.கணக்கியலின் அடிப்படை | இது ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சார்பற்ற விவரங்கள் பதியப்படுவதில்லை. | இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாரா விவரங்களான கொடுபட வேண்டிய செலவுகள் தேய்மானம் போன்றவைகளும் இங்கு பதியப்படும். |
| 4. தொடக்க மற்றும் இறுதி இருப்பு | இது ரொக்கம் மற்றும் வங்கி கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி ரொக்கம் மற்றும் வங்கி கணக்கின் இறுதி இருப்புடன் முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது. |
| 5. நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைத்து பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களை கொண்டிருக்கும் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே அதாவது வருவாயின செலவுகள் மற்றும் வருவாயின வரவுகளை மட்டுமே கொண்டிருக்கும். |

### 4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?

**அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை**

பந்துகள் மட்டைகள் போன்ற பழைய விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகை ஒரு வருவாயின வரவாகும்.

**ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்**

உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள்உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். ஏனெனில் இது திரும்ப திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

**(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி**

தொடர் விளையாட்டு நிதியானது பொறுப்புகள் பக்கத்திலும் தொடர் விளையாட்டு போட்டி நிதிக்கான முதலீட்டுக் கணக்கு இருப்புநிலைக்குறிப்பின் சொத்துக்கள் பக்கத்திலும் காட்டப்படும். தொடர் விளையாட்டு போட்டி நிதி கணக்கு தொடர்பான வருவாய் மற்றும் செலவுகள் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதிவு செய்யக்கூடாது

தொடர் விளையாட்டுப் போட்டி நிதி தொடார்பான வருவாய் அவ்வாண்டு இறுதியில் தயாரிக்கப்படும். இருப்புநிலைக்குறிப்பில் தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக் கணக்கில் கூட்டப்பட வேண்டும். மற்றும் தொடர் விளையாட்டுப் போட்டி நிதி தொடர்பான செலவுகள் அந்நிதிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான முதலீடு மீதான வட்டி நடப்பாண்டில் பெற வேண்டி இருந்தால் அது தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கணக்குடன் கூட்டப்பட்டு இருப்புநிலைக்குறிப்பில் பொறுப்புகள் பக்கத்திலும் மற்றும் சொத்துகள் பக்கத்தில் பெற வேண்டிய முதலீடு மீது வட்டி என்றும் காட்டப்பட வேண்டும்.

# அலகு – 3

# கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

## II. மிகக்குறுகிய வினாக்கள் –

### 1. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.

இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4–ன் படி கூட்டாண்மை என்பது " எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்.

### 2. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

- ✓ கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கிடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும்.
- ✓ நிறுவனம் கூட்டாண்மை ஒப்பாவணத்தை கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

### 3. நிலைமுதல் முறை என்றால் என்ன?

நிலைமுதல் என்பது கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும் மற்றும் பொதுவாக அதே தொகையாக நிலையாக இருப்பது ஆகும்.

### 4. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன ?

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | முதல் மீது வட்டி க/கு | பற்று | | x x x | |
| | கூட்டாளிகள் நடப்பு க/கு | | | | x x x |
| | கூட்டாளிகள் நடப்பு க/கு | | | | x x x |
| | (முதல் மீது வட்டி வழங்கியது) | | | | |

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இலாப நட்டப் பகிர்வு க/கு | பற்று | | x x x | |
| | முதல் மீது வட்டி க/கு | | | | x x x |
| | (முதல் மீது வட்டி கணக்கை முடிந்தது) | | | | |

### 5. இலாபநட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?

✓ நிறுவனத்தின் இலாப நட்டக் கணக்கின் படியான நிகர இலாபம், முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி போன்ற சரிகட்டுதல்களுக்கு உட்பட்டது.

✓ இத்தகைய சரிகட்டுதல்களை இலாப நட்டக் கணக்கு தயாரிப்பதன் மூலம் மட்டுமே கண்டறிய முடியும்.

✓ எனவே இலாபநட்ட பகிர்வு கணக்கு கட்டாயம் தயாரிக்கப்பட வேண்டும்.

## II. குறுகிய வினாக்கள்

### 1. கூட்டாண்மையின் சிறப்பியல்புகளைத் தரவும்.

✓ கூட்டாண்மை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் உருவாக்கப்படும் ஒரு அமைப்பாகும். அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 என வரையறுக்கப்பட்டுள்ளது.

✓ தொழில் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்ள கூட்டாளிகளுக்கு இடையே உடன்பாடு இருக்க வேண்டும். உடன்பாடு எழுத்து வடிவிலோ அல்லது பேச்சு வடிவிலோ அல்லது உட்கிடையாகவோ இருக்கலாம்

✓ கூட்டாண்மை உடன்பாடு ஒரு தொழில் நிறுவனத்தை நடத்தி அதிலிருந்து கிடைக்கும் இலாபத்ததை பகிர்வதாக இருக்க வேண்டும்.

✓ கூட்டாண்மை நிறுவனத்தை கூட்டாளிகள் அனைவருமோ அல்லது அனைவரின் சார்பில் அவர்களில் ஒருவரோ நடத்தலாம்.

## 2. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

- ✓ நிறுவனத்தின் பெயர், தன்மை மற்றும் தொழில் செய்யும் இடம்
- ✓ தொழில் துவங்கிய நாள் மற்றும் தொழிலின் கால அளவு
- ✓ அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
- ✓ ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல்
- ✓ இலாப பகிர்வு விகிதம்
- ✓ ஒவ்வொரு கூட்டாளிக்கும் அனுமதிக்கப்பட்ட எடுப்பு தொகை

## 3. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

| வேறுபாட்டின் அடிப்படை | நிலைமுதல் முறை | மாறுபடும் முதல் முறை |
|---|---|---|
| **கணக்குகளின் எண்ணிக்கை** | ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது முதல் கணக்கு மற்றும் நடப்பு கணக்கு பராமரிக்கப்படுகிறது. | ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு அதாவது முதல் கணக்கு பராமரிக்கப்படுகிறது |
| **முதல் தொகையில் மாற்றம்** | கூடுதல் முதல் கொண்டு வரும் போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும் போது தவிர மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல் நிலையாக இருக்கும் | முதல் தொகை பருவந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும் |
| **இறுதி இருப்பு** | முதல் கணக்கு எப்போதும் வரவிருப்பையே காட்டும் ஆனால் நடப்பு கணக்கு பற்றிருப்பையோ வரவிருப்பையோ காட்டும் | முதல் கணக்கு பொதுவாக வரவிருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூடக் காட்டலாம். |

## 4. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932–ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.

கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932–ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்

- ✓ கூட்டாளிகளின் ஊதியம் (பிரிவு 13(அ))
  எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பு ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.
- ✓ இலாப பகிர்வு விகிதம் (பிரிவு 13(ஆ))
  இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- ✓ முதல் மீது வட்டி (பிரிவு 13(இ))
  கூட்டாளிகளின் முதல மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி தான் அளித்த முதல் தொகைக்கு முதல் மீது வட்டி பெற உரிமை உடையவராயின் அந்த முதல் மீது வட்டி இலாபத்திலிருந்து மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

- ✓ கூட்டாளிகளிடமிருந்து நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் மீதான வட்டி (பிரிவு 13(ஈ))
  கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்.
- ✓ எடுப்புகள் மீது வட்டி
  கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக் கூடாது.

# அலகு – 4

# கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

## . I. மிகக்குறுகிய வினாக்கள் –

### 1. நற்பெயர் என்றால் என்ன?

- ✓ ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும்.
- ✓ நற்பெயர் ஒரு புலனாகா நிலைச் சொத்தாகும்.

### 2. வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?

வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயரானது ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்று அழைக்கப்படுகிறது.

### 3. உயர் இலாபம் என்றால் என்ன?

- ✓ ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபமாகும்.
- ✓ உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

### 4. சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன?

சாதாரண இலாப விகிதம் ஒரு தொழில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம்.

### 5. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

- ✓ இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும் போது
- ✓ கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது.
- ✓ ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்கும் போது

Padasalai

## 6. நற்பெயரை மதிப்பிடும் முறைகள் யாவை?

பொதுவாக நற்பெயரை பின்வரும் முறைகளில் மதிப்பிடலாம்.

- ✓ சராசரி இலாப முறை
- உயர் இலாப முறை
- ✓ மூலதனமாக்கல் முறை

## II. குறுகிய வினாக்கள்

## 1. நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

✓ **தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் :–**

நல்ல தரமான பொருட்கள் மற்றும சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கும் நிறுவனத்தின் நற்பெயர் அதிகமாக இருக்கும்.

✓ **போட்டியின் அளவு :–**

போட்டியே இல்லாத குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

✓ **பிற காரணிகள் :–**

உரிமையாளரின் பிரபலம் ஈர்க்கக்கூடிய விளம்பரம் வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற பிற காரணிகளும் தொழிலின் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

✓ **நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் :–**

நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது. அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லது எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டும் திறனைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம் அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.

✓ **வியாபார நிறுவனத்தின் கால அளவு :–**

நீண்ட ஆண்டுகள் வணிகத்ததை நடத்தி வரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால் இந்த நிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும். அந்நிறுவனத்தை புதிய நிறுவனத்துடன் ஒப்பீடு செய்யும் போது அதிக வருமானம் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

✓ **திறமைமிகு மேலாண்மை :–**

திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம் திறமை குறைந்த மேலாண்மைத்திறன் கொண்டுள்ள நிறுவனத்தோடு ஒப்பிடுகையில் அதிகமான இலாபம் ஈட்டும் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

## 2. உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

✓ சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண இலாப விகிதம்

✓ பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச்சொத்துக்கள் – நடப்புப் பொறுப்புகள்

✓ சாதாரண இலாப விகிதம் = ஒரு தொழில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம்.

## 3. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?

சாதாரண இலாப விகிதத்தில் உயர் இலாபத்தை மூலதனமாக்கப்படுவதன் மூலம் நற்பெயரின் மதிப்பு கணக்கிடப்படுகிறது. அதாவது மூலதனமாக்கப்பட்ட உயர் இலாபமே நற்பெயர் ஆகும்.

$$\text{நற்பெயர்} = \frac{\text{உயர்இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

# அலகு – 5

# கூட்டாளி சேர்ப்பு

. I. மிகக்குறுகிய வினாக்கள் –

## 1. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் என்றால் என்ன?

கூட்டாண்மையில் கூட்டாளி ஒருவரை சேர்க்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் ஏட்டுமதிப்பும் நடப்பு மதிப்பு மாறுபடலாம். எனவே அவை மறுமதிப்பீடு செய்யப்படுகிறது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பை தீர்மானிப்பது மறுமதிப்பீடு எனப்படுகிறது.

## 2. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது ?

பகிர்ந்து தரா காப்புகள் இலாபங்கள் அல்லது நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

## 3. தியாக விகிதம் என்றால் என்ன?

தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்ததை புதிய கூட்டாளிக்கு கொடுப்பதாகும்.

தியாகப்பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

தியாக விகிதம் = பழைய கூட்டாளிகள் செய்த தியாகப்பங்கின் விகிதம்.

## 4. புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது ஏற்கனவே உள்ள நற்பெயரை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | நற்பெயர் க/கு பற்று<br>பழைய கூட்டாளி முதல் க/கு<br>(நற்பெயர் பகிர்வு குறித்த பதிவு) | | x x x | x x x |

## 5. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதை தரவும்.

A. சொத்தின் மீதான தேய்மானம் – மறுமதிப்பீட்டு கணக்கு பற்று

B. பதிவுறா பொறுப்புகள் – மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று

C. கொடுக்கப்பட வேண்டிய செலவுகளுக்கான ஒதுக்கீடு – மறுமதிப்பீட்டு கணக்கில் வரவு

D. சொத்தின் மீதான மதிப்பேற்றம் – மறுமதிப்பீட்டு கணக்கு வரவு

## II. குறுகிய வினாக்கள்

## 1. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

- ✓ பகிர்ந்து தரா இலாபம் , காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்து அளித்தல்
- ✓ சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- ✓ புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தை நிர்ணயித்தல்
- ✓ நற்பெயர் சரிகட்டுதல்
- ✓ முதல் கணக்கை புதிய இலாப விகிதத்தின் அடிப்படையில் சரிகட்டுதல்.

## 2. சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டு பதிவுகள் யாவை?

| நாள் | விவரம் | பே.ப .எ ண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | **சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது :–** | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு பற்று | | ×××× | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | ×××× |
| | **சொத்துக்களின் மதிப்பு குறையும் போது :–** | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு பற்று | | ×××× | |
| | குறிப்பிபட்ட சொத்து க/கு | | | ×××× |
| | **பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது :–** | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு பற்று | | ×××× | |
| | குறிப்பிபட்ட பொறுப்பு க/கு | | | ×××× |
| | **பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது :–** | | | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு பற்று | | ×××× | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | ×××× |
| | **ஏட்டில் பதிவு செய்யாத சொத்துக்களை பதிவு செய்யும் போது :–** | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு பற்று | | ×××× | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | ×××× |
| | **ஏட்டில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது :–** | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு பற்று | | ×××× | |
| | குறிப்பிபட்ட பொறுப்பு க/கு | | | ×××× |

## 3. நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை குறித்து சிறு குறிப்பு தரவும்

**நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை :–**

கூட்டாளி சேர்க்கையின் போது நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளது.

- ✓ புதிய கூட்டாளி நற்பெயருக்கான ரொக்கம் அல்லது சொத்து கொண்டுவரும் போது
- ✓ புதிய கூட்டாளி நற்பெயருக்கான ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது
- ✓ புதிய கூட்டாளி நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும்
- ✓ ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது
- ✓ பழைய நற்பெயர்

# அலகு – 6

# கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

## . I. மிகக்குறுகிய வினாக்கள் –

### 1. கூட்டாளி விலகல் என்றால் என்ன?

- ✓ ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும்.
- ✓ கூட்டாளி விலகினால் பழைய ஒப்பந்தம் முடிவுக்க வந்து விடும்.

### 2. ஆதாய விகிதம் என்றால் என்ன?

✓ ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.

✓ ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும்.

✓ ஆதாயப்பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

### 3. ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?

- ✓ ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும். ஆதாயப்பங்கு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.
- ✓ ஆதாயபங்கு = புதிய பங்கு – பழைய பங்கு
- ✓ ஆதாய விகிதம் தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப்பட்ட ஆதாயத்தின் விகிதம் ஆகும்

## 4. இறந்த கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்கு குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளி முதல் க/கு பற்று<br>இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு<br>(நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றியது குறித்தபதிவு) | | x x x | x x x |

## II. குறுகிய வினாக்கள்

## 1. கூட்டாளி விலகலின் போது செய்யப்பட வேண்டிய சரிகட்டுதல்களை பட்டியலிடவும்.

- ✓ பகிர்ந்து தரா இலாபங்கள் , காப்புகள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளித்தல்
- ✓ சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- ✓ புதிய விகிதம் மற்றும் தியாக விகிதம் ஆகியவற்றை தீர்மானித்தல்
- ✓ நற்பெயர் சரிகட்டுதல்
- ✓ கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பாண்டு இலாபம் அல்லது நட்டத்தை சரிகட்டுதல்
- ✓ விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துதல்.

## 2. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

| அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| பொருள் | இது புதிய கூட்டாளிக்கு பழைய கூட்டாளிகள் தியாகம் செய்து கொடுக்கும் இலாப பங்கின் விகிதாச்சாரம் ஆகும் | இது தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியிடமிருந்து பெறும் ஆதாயப்பங்கின் விகிதாச்சாரம் ஆகும். |
| கணக்கிடும் காலம் | இது புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது | இது கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது. |
| கணக்கிடும் முறை | இது பழைய இலாப விகிதத்திற்கும் மற்றும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம் | இது புதிய இலாப விகிதத்திற்கும் மற்றும் பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம். |

3. வெளிச் செல்லும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

- ✓ அவருக்கு சேர வேண்டிய முழுத்தொகையையும் ரொக்கமாக உடனடியாக செலுத்தலாம்
- ✓ மொத்த தொகையையும் கூட்டாளியின் கணக்கிற்கு மாற்றி விடலாம்
- ✓ பாதித் தொகையை உடனடியாக ரொக்கமாகவும் மீதித் தொகையை கடன் கணக்கிற்கு மாற்றி விடலாம்.

# அலகு – 7

# நிறுமக் கணக்குகள்

## I. மிகக்குறுகிய வினாக்கள் –

### 1. பங்கு என்றால் என்ன?

ஒரு நிறுமத்தின் முதல் குறிப்பிட்ட பண மதிப்பில் ஆன சிறிய அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். இந்த அலகுகள் பங்குகள் என அழைக்கப்படுகின்றன.

### 2. மிகை ஒப்பம் என்றால் என்ன?

வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட விண்ணப்பிக்க பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

### 3. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?

பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்பு தொகையை செலுத்த தவறினால் இன்னமும் செலுத்தப்படாமல் உள்ள தொகை அழைப்பு நிலுவை எனப்படும்.

### 4. பத்திர முனைம கணக்கு பற்றி சிறு குறிப்பு வரையவும்.

ஒரு நிறுமம் தனது பங்குகளை முகமதிப்பினை விட (பெயரளவு மதிப்பு) அதிக விலைக்கு வெளியிடும் போது அந்த பங்குகள் முனைமத்தில் வெளியிடுதல் என்று அழைக்கப்படுகிறது. முகமதிப்பை விட மிகுதியான தொகை முனைமம் ஆகும். இது பத்திர முனைம கணக்கிற்கு மாற்றப்படுகிறது. பத்திர முனைமத் தொகை இருப்புநிலைக்குறிப்பில் கணக்குகளுக்கான குறிப்புகளில் காப்புகள் மற்றும் மிகுதி என காட்டப்படுகிறது.

### 5. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டுப் பணத்தை அல்லது அழைப்பு பணத்தையோ செலுத்த தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

Padasalai

## II. குறுகிய வினாக்கள்

### 1. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக கூறவும் ?

- ✓ பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாக பெறப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும்.
- ✓ இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்பு கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.

### 2. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன ?

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறு வெளியீடு செய்தல் : –

- ✓ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நிறுமத்தால் மறு வெளியீடு செய்யப்படலாம். அப்பங்குகள் எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.
- ✓ செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்க கூடாது.

### 3. முன்னுரிமைப் பங்குகளுக்கும் நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறவும்.

| முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|
| நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் பங்காதாயம் பெறும் முன்னுரிமை | நேர்மைப் பங்குகளுக்கான பங்காதாயம் விகிதம் நிலையாக இருப்பதில்லை. |
| இரு முன்னுரிமைகளை பெற்றுள்ள பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் ஆகும்.<br>* நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம் பெறும் முன்னுரிமை.<br>* நிறுமக் கலைப்பின் போது முதலை திரும்பப் பெறும் முன்னுரிமை | இவ்வகை பங்குகள் எவ்விதமான முன்னுரிமையையும் பெற்றிருக்கவில்லை. |
| நிறுமக் கலைப்பின் போது முதலை திரும்ப பெறும் முன்னுரிமை உண்டு. | நிறுமக் கலைப்பின் போதும் முன்னுரிமை பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப பெற்ற பிறகே நேர்மை பங்குதாரர்களுக்கு செலுத்தப்படும். |

## 4. சிறு குறிப்பு வரைக –

**(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் –**

- ✓ அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதலாகும்.
- ✓ அதிகபட்சமாக முதலாகத் திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை
- ✓ இதனை பதிவு செய்யப்பட்ட முதல் அல்லது பெயரளவு முதல் என்றும் கூறலாம்.

**(ஆ) காப்பு முதல் –**

மறுவெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையை விட அதிகமாக இருப்பின் அதன் விளைவு மறுவெளியீட்டின் இலாபம் ஆகும். அது ஒரு முதலின இலாபமாகும். அது முதலின காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

**5. ரொக்கம் தவிர இதர மறு பயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன ?**

நிறுமம் , நிலம் மற்றும் கட்டிடம் , இயந்திரம் போன்ற நிலைச் சொத்துக்களை வாங்கும் போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறு பயனுக்காக வெளியிடலாம். இத்தருணத்தில் கீழ்கண்ட பதிவு களை பதிய வேண்டும்.

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | (i) சொத்துக்களை வாங்கும் போது | | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | பற்று | | x x x | |
| | விற்பனையாளர் க/கு | | | | x x x |
| | (ii) பங்குகளை வெளியிடும் போது | | | | |
| | விற்பனையாளர் க/கு | பற்று | | x x x | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | x x x |

## அலகு – 8

## நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

### I மிகக்குறுகிய வினாக்கள்

**1. நிதிநிலை அறிக்கைகள் யாவை?**

ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே நிதிநிலை அறிக்கைகள் ஆகும். வியாபார நிறுவனங்களால் தயாரிக்கப்படும் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவை அடிப்படை நிதிநிலை அறிக்கைகளாகும்.

## 2. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.

- ஒப்பீட்ட அறிக்கை
- பொது அளவு அறிக்கை
- போக்குப் பகுப்பாய்வு
- நிதி ஓட்டப் பகுப்பாய்வு
- ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

## 3. நடைமுறை முதல் என்றால் என்ன?

நடைமுறைமுதல் என்பது நடப்புப் பொறுப்புகளை விட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்

## 4. போக்குப் பகுப்பாய்வு எப்போது இதர பகுப்பாய்வு கருவிகளை விட ஏற்புடையதாகும்?

போக்கு என்பது இயக்கத்தின் போக்கினை குறிப்பதாகும். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்ள தகவல்களை பகுப்பாய்வு செய்து ஒப்பீட்டு அளவு அறிக்கை முறையை பயன்படுத்துவதால் போக்கு பகுப்பாய்வு இதர பகுப்பாய்வை விட சிறந்தது ஆகும்.

# III குறுகிய வினாக்கள்

## 1. நிதிநிலை அறிக்கைகள் கடந்த கால விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. இது எப்படி ஒரு குறைபாடாகும் என விளக்கவும்.

(i) **பணம் சாரா தகவல்கள் இல்லாமை:**

பணம் சாரா தகவல்களும் வியாபார முடிவெடுத்தலுக்கு முக்கியமானதாகும். எடுத்துக்காட்டாக, பணியாளர்களின் திறமை, மேலாண்மையின் திறமை போன்றவை. ஆனால், இவை நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெறுவதில்லை.

(ii) **கடந்த கால விவரங்களின் பதிவேடு:**

நிதிநிலை அறிக்கைகள் கடந்தகால விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனவே அவைநடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

(iii) **விலை நிலை மாற்றங்களை பொருட்படுத்துவதில்லை:**

விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் நிதிநிலை அறிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

(iv) **நிலைத்தன்மை குறைவு:**

பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு கணக்கியல் முறைகளைபின்பற்றுகின்றன. எனவே, இரண்டு தொழிலமைப்புகளை ஒப்பீடு செய்வது கடினமாகும்.

(v) **இடைக் கால அறிக்கைகளை மட்டுமே தருகிறது:**

நிதிநிலை அறிக்கைகள் ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப் படுகின்றன. ஆனால், வணிகத்தின் உண்மையான நிலவரத்தை, நிறுவனத்தின் கலைப்பின் போது மட்டுமே அறிய இயலும். எனவே, நிதிநிலை அறிக்கைகள் நிறுவனத்தின் துல்லியமான நிலையினை வெளிக்காட்டாது.

(vi) **புறப்பயனீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட தகவல்கள்:**

புறப்பயனீட்டாளர்கள் அணுகல் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள், முழுமையான தொடர்சியான நிதிநிலை முடிவுகளைப் பெற முடியாது.

(vii) **தனிப்பட்ட முடிவுகளினால் பாதிக்கப்படுகிறது:**

நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பு என்பது தனிநபரின் முடிவுக்குட்பட்டது. எனவே, இவை ஒரு தலைபட்சமானதாக இருக்கலாம்.

## 2. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையுவும்.

- ❖ ரொக்க பகுப்பாய்வு என்பது ரொக்க ஒட்ட அறிக்கை தயாரிப்பதை குறிக்கும். இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும்
- ❖ ரொக்கம் என்பது கை ரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது
- ❖ ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக் கூடிய குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும்.
- ❖ ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு வணிக நிறுவனத்தின் நீர்மைத் தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள் கணக்கிடுவதற்கு உதவிகரமானதாக இருக்கிறது.

## 3. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.

- ❖ பணம் சாரா தகவல்கள் புறக்கணிப்பு விலை நிலை மாற்றங்கள் புறக்கணிப்பு போன்ற நிதி அறிக்கைகளில் காணப்படும் எல்லா குறைபாடுகளும் நிதி நிலை அறிக்கை பகுப்பாய்விலும் காணப்படுகின்றன.

- ❖ நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது ஒரு வழித்தானே. தவிர இதுவே முடிவல்ல. அதாவது இது மேலாண்மை மற்றும் பிற பங்குதாரர்களுக்கான ஒரு கருவியே ஆகும். முடிவுகளை உய்த்துணர்தல் என்பது அக மற்றும் புறக் காரணிகளுக்கான முக்கியத்துவத்துடன் நிதிநிலை பகுப்பாய்வாளர்களால் மட்டுமே செய்யப்படும்.

- ❖ நிதிநிலை அறிக்கை செய்வதற்கு நிபுணத்துவ அறிவு தேவையானதாகும்.

## 4. ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

- ❖ பத்தி 1 – இந்த பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்.
- ❖ பத்தி 2 – முதலாண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்
- ❖ பத்தி 3 – இரண்டாமாண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்
- ❖ பத்தி 4 – முதலாண்டு தொகைக்கும் இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினை காட்டவும். இரண்டாமாண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்
- ❖ பத்தி 5 – நாலாம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை இரண்டாம் பத்தியில் (முதலாண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) நாலாம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினை காட்டவும்.

கூடும் அல்லது குறையும் சதவீதம் = $\frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}}$ x 100

ஒப்பு நோக்கும் அறிக்கையின் படிவம் –

| விவரம் | ஆண்டு 1 ₹ | ஆண்டு 2 ₹ | தொகையின் கூடுதல் கூடுதல் (+) அல்லது குறைவு (–) ₹ | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) ₹ |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

## 5. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.

- பத்தி 1 – வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக்குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.
- பத்தி 2 – தொகையினை பதிவு செய்யவும்
- பத்தி 3 – பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும்

எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக்குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக்குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக் கொள்ளப்படலாம். பத்தி 2–ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3–ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

# அலகு – 9

# விகிதப் பகுப்பாய்வு

## i மிகக் குறுகிய வினாக்கள்

## 1. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?

விகிதம் என்பது இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றை ஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவதாகும். ஒரு இனத்தை அது தொடர்பான மற்றொரு இனத்தால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

## 2. விரைவு விகிதம் என்றால் என்ன?

விரைவு விகிதம் நீர்மைச் சொத்துகளுக்கும் நடப்புப் பொறுப்புகளுக்குமுள்ள விகிதாச்சாரமாகும். இது ஒரு வணிக நிறுவனம் தன்னுடைய நடப்புப் பொறுப்புகளை எப்போது செலுத்து வேண்டுமோ அப்போது அதை நீர்மைச் சொத்துகளிலிருந்து எதிர்கொள்ளும் நிலையில் உள்ளதா என்பதைக் குறிப்பதாகும்.

### 3. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?

புற அக பொறுப்பு விகிதம் ஒரு வணிக நிறுவனத்தின் நீண்டகால கடன் தீர்க்கம் திறன் மதிப்பிடுவதற்கு கணக்கிடப்படுகிறது. புற அக பொறுப்புகள் விகிதம் நீண்டகால கடன் மற்றும் பங்குதாரர் நிதிக்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது.

### 4. முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?

முதலீடு மீதாள வருவாய் விகிதமானது பயன்படுத்தப்பட்ட முதல் வணிகத்தில் எவ்வாறு திறமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை குறிக்கிறது.

### 5. விகித பகுப்பாய்வின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைத் தரவும்.

**(i) விகிதங்கள் வழிமுறைகளை மட்டும் தருகின்றன –**

விகிதங்களே முடிவல்ல. ஆனால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்கான வழிமுறைகளை மட்டும் அவை தருகின்றன. நிர்வாகத்தினர் அல்லது வல்லுநர்கள் விகிதங்கள் உதவியுடன் ஒரே தன்மையுடைய இனங்களை ஆய்வு செய்ய வேண்டும்

**(ii) நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் நிலைத்தன்மை ;**

நிறுவனங்கள் ஒருமித்த கணக்கியல் நடைமுறைகளை நிலையாகப் பின்பற்றும் போது மட்டும் தான் விகிதப் பகுப்பாய்வின் உதவியுடன் நிறுவனத்திற்குள் ஒப்பீடு செய்வது அர்த்தமுடையதாகிறது.

## iii குறுகிய வினாக்கள் ;

### 1. விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்

- கணக்கியல் தொகையை சுருக்கமாகக் கூற
- நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகை செய்ய
- தொழில் நிறுவனத்தின் இயக்க செயல்திறனை பகுப்பாய்வு செய்ய
- திட்டமிடுதல் மற்றும் முன் கணித்தலுக்கு உதவ
- நிறுவனத்திற்குள்ளேயும் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயும் செயல்பாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க

### 2. சரக்கிருப்பு மாற்று காலம் என்றால் என்ன? இது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

சரக்கிருப்பு மாற்று காலம் என்பது சரக்கிருப்பை விற்பனை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் ஆகும். குறுகிய சரக்கிருப்பு மாற்று காலம் சரக்கிருப்பு மேலாண்மையின் அதிக செயல்திறனை குறிப்பிடுகிறது.

சரக்கிருப்பு மாற்று காலம் (நாட்களில்) = ஒரு ஆண்டிலுள்ள நாட்கள் / சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

சரக்கிருப்பு மாற்று காலம் (மாதங்களில்) = ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள் / சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

### 3. இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்கவிலை

இயக்க இலாப விகிதம் = 100 – இயக்க அடக்க விலை விகிதம்

### 4. விகித பகுப்பாய்வின் ஏதேனும் மூன்று நன்மைகள் தரவும்

- செயல்பாடுகளின் செயல்திறனை அளவிடுகிறது
- நிதிநிலையின் கடன் தீர்க்கும் திறனை அளவிடுகிறது

- இலாபத்தன்மையை ஆய்வு செய்கிறது
- நிறுவனத்திற்குள் ஒப்பீடு
- நிறுவனங்களுக்குள் ஒப்பீடு

### 5. விகித பகுப்பாய்வின் குறைபாடுகளைத் தரவும்

i) விலை நிலையில் ஏற்படும் மாற்றம் ; நிதிநிலை அறிக்கைகளில் தரப்பட்டுள்ள புராதன தகவல்களின் அடிப்படையில் விகிதப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுவதால் விலை நிலையில் ஏற்படும் மாற்றம் மற்றும் தற்போதைய மதிப்பை இது பிரதிபலிப்பதில்லை.

(ii) விகிதங்கள் வழிமுறைகளை மட்டும் தருகின்றன – விகிதங்களே முடிவல்ல. ஆனால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்கான வழிமுறைகளை மட்டும் அவை தருகின்றன. நிர்வாகத்தினர் அல்லது வல்லுநர்கள் விகிதங்கள் உதவியுடன் ஒரே தன்மையுடைய இனங்களை ஆய்வு செய்ய வேண்டும்

(iii) நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் நிலைத்தன்மை ; நிறுவனங்கள் ஒருமித்த கணக்கியல் நடைமுறைகளை நிலையாகப் பின்பற்றும் போது மட்டும் தான் விகிதப் பகுப்பாய்வின் உதவியுடன் நிறுவனத்திற்குள் ஒப்பீடு செய்வது அர்த்தமுடையதாகிறது.

## அலகு – 10

## கணினி கணக்கியல் முறை – TALLY

### i மிகக் குறுகிய வினாக்கள்

### 1. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

தானியங்கும் கணக்கியல் முறை என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கண்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அனுகுமுறையாகும்.

### 2. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

- ✓ கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளிலிருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பாகும்.
- ✓ கணக்கியல் அறிக்கைகளை வழக்கமான அறிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் என வகைப்படுத்தலாம்

### 3. ஏதேனும் 5 கணக்கியல் அறிக்கைகளை கூறு ?

- ✓ நாளேடு / குறிப்பேடு
- ✓ பேரேடு
- ✓ இருப்பாய்வு
- ✓ இலாப அறிக்கை

- ✓ இருப்புநிலைக்குறிப்பு
- ✓ ரொக்க ஓட்ட அறிக்கை

## 4. கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன ?

கணக்கியல் தகவல் அமைப்பு நிதியில் தரவுகளை சேகரித்து அதை செயலாக பெறச் செய்து பல்வேறு பயனர்களுக்கு தகவலாக அளிக்கிறது.

## 5. TALLY ERP 9 –ல் குழு என்றால் என்ன ?

- ✓ 2009 ஆம் ஆண்டு Tally Solution, Tallly , ERP 9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது.
- ✓ இந்த மென்பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது.
- ✓ இது இரட்டைப் பதிவு முறையில் கண்கேடுகளை பராமரிக்கிறது.
- ✓ 2017 ஆம் ஆண்டு இந்தியச் சரக்கு மற்றும் சேவை வரியின் தேவைக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டது.

## iii குறுகிய வினாக்கள் ;

## 1. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.

- ✓ நடவடிக்கைகளின் விவரங்களைக் கொண்டுள்ள ஒரு ஆவணமே கணக்கியல் சான்றாவணம் ஆகும்
- ✓ நடவடிக்கைகள் சான்றாவண பதிவுகள் மூலமே பதியப்பட வேண்டும்.
- ✓ முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல் , விற்பனை , செலுத்துதல் , பெறுதல் மற்றும் எதிர்பதிவு போன்ற சான்றாவணங்களை TALLY கொண்டுள்ளது.

## 2. TALLY ERP 9 – ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை ?

- ✓ முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்ட கணக்கு ஆகிய இரண்டு பேரேடுகளை TALLY கொண்டுள்ளது.
- ✓ மற்ற பேரேடுகளை அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கி கொள்ள வேண்டும்

## 3. TALLY ERP 9 – பொதுவாக பயன்படுத்தபடும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்

- ✓ பெறுதல் சான்றாவணம் / வரவுக் குறிப்பு
- ✓ செலுத்தல் சான்றாவணம் / செலுத்தல்
- ✓ எதிர்பதிவு சான்றாவணம் / CONTRA
- ✓ கொள்முதல் சான்றாவணம் / கொள்முதல்

- ✓ விற்பனை சான்றாவணம் / விற்பனை
- ✓ உரிய குறிப்பேடு சான்றாவணம் / JOURNAL

## 4. TALLY ERP 9 – ல் இலாப நட்ட கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.

**இலாப நட்ட கணக்கை பார்வையிட**

F 10 : A / c Reports > Profit & Loss A/c > Alt F 1 ( Detailed )

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > Alt F 1 (Detailed)

## 5. கணினி மைய கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

1. கணக்கேடுகளை பராமரித்தல் – கணினி மைய கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்
2. சரக்கிருப்ப மேலாண்மை – கணினி மைய கணக்கியல் முறை திறம்பட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது.
3. அறிக்கை உருக்குதல் – கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்க உதவிபுரிகிறது.
4. தரவு அனுப்புதல் – கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள வேறு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்
5. வரிவிதிப்பு – கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை பிடித்தம் செய்து அரசாங்க கணக்கியல் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது..

Prepared BY

G. PRAKASH. M.com. M.Phil. B.ed. D.ted

Gugai Hr. Sec. School. salem -6

Contact - 9488270034